Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

தாலை 17 } ஈரோடு, 30-9-1944 புரட்டாசி-மீ 15உ { மலர் 51

# திராவிடர் கழகத்தை எதிர்ப்பது யோக்கியமா?

## எதிரிகளைப் பணியச்செய்வது எப்படி?

## திருச்சியில் பெரியார் விளக்கம்

### விருந்து

17—9—44-ந் தேதி இரவு 8-30 மணிக்கு திருச்சி 'காரனேஷன் பார்க்'கில் சுமார் 400 தோழர்கள் கலந்து கொண்டு பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு அறுசுவை உண்டி நடத்தினார்கள். பல பெண்களும் கலந்து கொண்டனர். விருந்து முடிந்த பின்னர், திருச்சி திராவிட மக்கள் சார்பாக தோழர் தி. பொ. வேதாசலம் அவர்களும், மலைக்கோட்டை திராவிட வாலிபர் கழகத்தின் சார்பாக தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களும் வாழ்த்திதழ்கள் வாசித்துப் பெரியார் அவர்களுக்கு மலர் மாலைகளிட்டார்கள். பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தின் சார்பிலும், மணச்சநல்லூர் திராவிடர் கழகத்தின் சார்பிலும் மற்றும் பலக் கழகங்கள் சார்பிலும் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தலைவர் பெரியார் அவர்கள் வாழ்த்திதழ்களுக்கும், விருந்துபசாரத்திற்கும் நன்றி கூறுமுகத்தான் 'திராவிட இளைஞரும், அவர் தம் கடமையும்' எனும் பொருள் பற்றி உணர்ச்சியுடன் சொற்பொழிவாற்றினார்கள்:

"தோழர்களே!

இன்று 66-ஆம் ஆண்டு கொண்டாட்டம் என்பதன் பெயரால் இவ்வளவு பெருமையும் பாராட்டுதலும் எனக்களித்ததற்காக நான் மிகுதியும் நன்றி செலுத்துகிறேன். நீங்கள் குறித்த புகழுக்கு நான் உரிமையுடையவன் என்று வைத்துக்கொண்டாலும், அது நீங்களாகவே எனக்கு ஏற்படுத்தி வைத்தது தான்.

### என் பெருமை உங்களால்

"எவ்வளவு பெரிய சிறப்பும் பெருமையும் உள்ள கோவிலாக இருந்தாலும், அதன் சிறப்பிற்குக் காரணம் அங்கே செல்லும் மக்களைப்பொறுத்து இருக்கிறதேதவிர, உள்ளேயுள்ள உருப்படி அல்ல. அதற்கு மற்ற உருப்படிகளைவிட அதிக யோக்கியதையும் கிடையாது. அது போலவேதான் உங்களைப் பொறுத்திருக்கிறது என்னுடைய புகழும், தொண்டும்.

"இவ்வளவு அன்பும், ஆர்வமும், நம்பிக்கையும் கொண்ட மக்களை எப்படிப் பயன் படுத்துவது என்ற கவலை எனக்குச் சில சமயங்களில் வருவதுண்டு. வெளியிலுள்ள போராட்டங்களையும் நமக்குத் தொல்லைகொடுத்து வயிறுவளர்ப்பவர்களையும் மறந்து நம்மீதுள்ள பொறுப்பைச் சிந்திப்போம். இன்று கட்சிப் பிரதிகட்சித் தகராறை மறந்து, நம்மீது சில இழிமக்கள் செய்துவரும் வீண் பிரசாரத்தையும் மறந்து, இவ்வளவு பெரிய தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டோமே என்ற நம்பிக்கையில், 'நமது நாட்டை நாம் பெற்றே தீருவோம்' என்ற நிலைக்கு வந்துவிட்டோம்.

"ஒரு பிரபலஸ்தர்-மிகப்பெரியவர், சமீபத்தில், 'பாகிஸ்தானாவது, திராவிட நாடாவது, எல்லாம் கனவுதான்' என்றார். 'அது கனவோ, நனவோ, அது இன்று பெரிய பிரச்சினை ஆகிவிட்டது. பல ஆயிரக்கணக்கான மக்களை 'திராவிடநாடு திராவிடருக்கே' என்னும் பிரச்சினைக்காக சிறைக்கு அனுப்பவும் என்னால் முடியும், சாகும்போதும் திராவிடநாடு என்று சொல்லிக்கொண்டே சாக இருக்கிறேன், பிறகு எப்படியோ ஆகட்டும்" என்று பதில்கூறினேன். முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், அவர்கள் நிலைமை ஒன்றுதான். ஆரியஸ்தானிலும், அவர்கள் கட்டுப்பாடுடன் இருப்பதால் நன்று வாழ்வார்கள். ஆனால் நமக்குத் திராவிடநாடு கிடைக்காவிட்டால் நம் நிலைமை படுமோசமாகிவிடும். நாம் உண்மையிலேயே சூத்திரர் ஆகிவிடுவோம். ஆகவே தான் திராவிடநாடு நமக்கு மிகவும் அவசியம் என்று கூறுகிறேன்.

### எதிரி பணிவார்கள்

"சர்க்கார் நாம் இவ்வளவு ஆர்வம் தியாக உணர்ச்சி உள்ளவர்களாக இருக்கிறோமென்பதை உணர்ந்தால் நம் கோரிக்கைக்குப் பணிந்தே தீருவர்: உதாரணமாக ரயில்வே சிற்றுண்டி விடுதிகளில் திராவிடருக்கிழைக்கப்பட்டு வந்த இழிவு நீக்கத்திற்காக நான் முயற்சித்த போது, என்னை மிரட்டினார்கள். ஆனால் வாலிபர்களின் உதவி, ஒத்துழைப்பு எனக்கிருக்கிறது என்பதை அறிந்ததும், கிளர்ச்சி துவக்குமுன்னரே நமக்கு வெற்றி கிடைத்து விட்டது.

'அதுமாத்திரமல்லாமல் சேலம் மாநாடு எதிரிகள் கோட்டைக்குள் கூர்க்கர்கள் காவலுக்குள் இருந்தது. சேலம் மாநாட்டில் கூடியிருந்த 12000 மக்களில், 11000 மக்கள், 26, 27 வயதுக்குக் குறைந்த வாலிபர்களாகவே காணப்பட்டதால் எதிரிகள் கோட்டையை விட்டு பின் வழியில் சென்றுவிட்டார்கள். இந்த உணர்ச்சி நாட்டு இளைஞர்களிடத்தில் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், நம் தீர்மானங்கள் நடைமுறையில் வந்துவிடும்! வந்து விடும்!! ஐயமில்லை.

### நாஸ்திகமா?

"சேலத்தில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தை சாக்காக வைத்துக்கொண்டு நாஸ்திக தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்கள் என்று நம்மைக் குறைகூறுகிறார்கள். 'நம் இனம் ஒன்று; நாமெல்லோரும் ஒரே ஜாதி' என்பது நாஸ்திகமா? "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற தமிழனுக்கு, 'தனி நாடு ஏன்? குறுகிய நோக்கமேன்'', என்று கூறுகின்றனர் சில புலவர் சிகாமணிகள். அப்படி நாடற்ற கூட்டம், யாதும் ஊரே என்னும் கூட்டம் நாடோடிக் கூட்டம் 'ஜிப்சி' ஒன்றுதான். நாங்கள் அவர்

களைப் போல் லம்பாடிகளாக இருக்க விரும்பவில்லை. எங்களுக்கு நாடு இருக்கிறது; அது எம்முடையதாக ஆகிவிடவேண்டும். இதுதான் திராவிடநாடு. அதை அடைவது தான் இன்று எங்களுடைய இலட்சியம்.

"நாம் திராவிடர், ஒரே சாதி; ஒரே கூட்டம். ஜாதி பேதத்தைக் காட்டி வயிறு வளர்க்கவேண்டிய அவசியத்தில்லை வாலிபர்களாகிய நீங்கள். நம்மை நாத்திகர் என்று கூறிவிடுவதாலேயே, வைதீக மக்கள் நம்மை ஒழுக்கங் கெட்டவர்களென்று சொல்லிவிட்டதாக மனப்பால் குடிக்கிறார்கள். ஒழுக்கம் மிகமிக அவசியம் என்று கூறுபவர் நாம் தான். 'சாமி இல்லை; அக்காளை தங்கையைக் கட்டிக்கொள்', 'மானமற்று மக்களைக் கொள்ளை அடியுங்கள்' என்றா நாம்சொல்கிறோம்? நம் எதிரிகள் நம்மை நாத்திக சங்கத்தார் என்று கூறுவது வெறும் பித்தலாட்டம். உண்மையான ஆத்திகன் நம்மைக் குறை கூறமாட்டான்.

## திராவிடர் கழகம் என்பதை எதிர்ப்பது யோக்கியமாகாது

"'திராவிடர் கழகம்' என்ற பெயரை எதிர்க்கின்றவன் ஒருவனாவது உண்மையிலேயே யோக்கியனாக இருக்கமாட்டான். கடந்த 5 ஆண்டுகளாகவே இதை வலியுறுத்திப் பிரசாரம் செய்து வருகிறோம்; எவனாவது அந்தக் காலத்தில் எதிர்த்தானா? இப்போது தான் என்ன? தெ. இ. ந. உ. சங்கமென்பதைத் 'திராவிடர் கழக'த்திற்கு விரோதமாக வைத்து அவர்கள் நடத்துவதாக இருந்தாலும் அவர்கள் எங்கே போய் என்ன செய்ய முடியும்? அவர்கள் குறி என்ன? அவர்கள் எங்கே போலீஸ் பந்தோபஸ்து இல்லாமல் கூட்டம் போடமுடியும்?

"நாம் ஆரம்பமுதல் இன்றுவரை ஒரே தன்மையான கொள்கைகளை வற்புறுத்திவருகிறவர்கள்; மற்றவர்களைப் போல் அடிக்கடி கொள்கைகளை கீழுக்கு மாற்றும் வழக்கம் நம்மிடத்தில் இல்லை. ஆகவே குடும்பக் கவலையில்லாத திராவிட வாலிபர்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் வெளியில் வந்து மக்கட் பணி புரியவேண்டும். மக்கட்குத் தொண்டாற்றக்கூடியவன் மானவமானத்தைக் கவனித்தல் கூடாது. வீட்டைக் கவனிக்கக்கூடாது. என்னைப்பற்றிக் குறைகூறுவோர் பலர் அதிலும் பணம், சார்பு, சம்மந்தமாகக் கட்டுப்பாடாய்ச் செய்யும் பிரசாரம், பார்ப்பனப் பத்திரிகைகள் செய்யும் விஷமப் பிரசாரம் ஆகியவை மலை போல். நான் அவைகளையெல்லாம் கவனிக்காமலிருப்பதால்தான், என்னுடைய மானம் அப்படியே நிலைத்திருக்கிறது. எதுசொன்னாலும் "ஆம். அப்படித் தான், முடிந்ததைப் பார்" என்பேன். சமாதானம் சொல்ல ஆரம்பித்தால் எதிரி ஜெயித்துவிடுவான். நான் சமாதானம் சொல்வது என் மனதுக்குத் தான்.

"அதுபோலவே நீங்கள் முதலில் உங்கள் மனத்தை நீங்கள் பரிசுத்தமாக வைத்துக்கொண்டு தைரியமாய் பேசவேண்டும். பொது வாழ்வில் மானத்தைப் பார்க்காதீர்கள். எவ்வளவுதாம் உணர்ச்சியோடு உறுதியோடு உங்கள் மனமறிய நீங்கள் குற்றமற்றவர்களாக நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு துணிந்து தொண்டாற்ற முடியும்.

## மனதில் குறை இருக்கக்கூடாது

"ஒருவன் தன்னுடைய சொந்தக் காரியத்தைப் பொருத்தமட்டில்தான் மானத்தையும் காலத்தையும் கவனிக்கவேண்டும். பொதுநலம், பொதுத்தொண்டு வந்துவிட்டால் இவை இரண்டையும் இலட்சியம் செய்யக்கூடாது. இதை மானத்திலும், காலத்திலும் கவலை கொண்ட திருவள்ளுவரே கூறியுள்ளார். மனத்துள்ளே குற்றங்குறை இருந்தால் வெளியில் செய்யுங் காரியமும் குறையுடையதாகவே இருக்கும் என்பதை நான் விஞ்ஞான (சயன்ஸ்) முறைப்படி கூறுகிறேன்.

"ஆகையினால், வாலிபத் தோழர்களே! உண்மை, ஒழுக்கம் தைரியம் ஆகிய மூன்றையும் நீங்கள் கொண்டு காரியத்தைத் துணிவுடன் நடத்தினீர்களானால், வெற்றி உங்களை வந்து பணியும். உங்கள் எதிரிகள் நாசமாவார்கள். இறுதியாக, இன்று உங்களுடைய ஆர்வத்தாலும், அன்பாலும், என் மீது கொண்டுள்ள நம்பிக்கையாலும், என்னைப் பத்து வயது குறைந்தவனாகவும், 10 டிகிரி வெக்கம் அதிகம் கொண்டவனாகவும் ஆக்கிவைத்ததற்கு உங்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகிறேன்."

தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் நன்றி கூறலுக்குப் பின், தமிழ் இன்னிசை, தோழர் மீனாட்சி சுந்தரம் (கரந்தை மாணவர்) அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. பிடில்—தைரியம், ஆரோக்கியசாமி; மிருதங்கம்—தியாகராஜன் ஆகியோர் பக்கவாத்தியக்காரராக அமர்ந்திருந்தனர். பாட்டுகள் அத்தனையும் கவி - பாரதிதாசன் பாடல்களாகவும் பெரியார் வாழ்த்துப் பாடல்களாகவும் இருந்தன.

இன்னிசை இனிதே முடிந்ததும், 'பெரியார் வாழ்க' 'திராவிடநாடு வாழ்க' என்ற வாழ்த்தொலிகளுடன் இரவு 12 மணிக்குக் கூட்டம் கலைந்தது. மறுநாள் காலையில் பெரியார் தனது குழுவுடன் ஈரோடு சென்றார்.

## விருதை வாசிகளே! செயலாற்ற எழுமின்

விருதுநகர், செப். 20-

தோழர்களே! தோழியர்களே!!

நமது திராவிடர் கழகம் எதிர்காலத்திலே எவ்வளவு அரும் செயலாற்ற இருக்கிறதென்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள். நமது திராவிடர் கழகம், பட்டம் பதவிக்காரர்களின் பாதந்தாங்கும் கழகமல்ல, ஆங்கிலேயர்களின் அடிகளை அடிவருடும் கழகமல்ல, உத்தியோக வேட்டையாடும் உலுத்த கழகமல்ல, திராவிடர்களை இந்து மதம் என்ற இடுக்கியில் இருந்து விடுவிக்க வந்த கழகம், வடநாட்டு ஆட்சியின் பிடிப்பில் இருந்து மீட்சிபெற உழைக்கும் கழகம், பாட்டாளிகளின் பண்புமிக்க கழகம்.

ஆதலின், அன்பர்களே! எழுமின்! ஒவ்வொருவரும் திராவிடர் கழகத்தின் உறுப்பினர்களாய் இன்றே சேருங்கள்.

ஆ. வ. ப. ஆசைத்தம்பி,
கன்வீனர்,
திராவிடர் கழகம்.

## அங்கத்தினர்கள் சேர்க்க 7பேர் கமிட்டி

விருதுநகர் செப். 18—

திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்க தோழர் ஆ.வ.ப. ஆசைத்தம்பியை கன்வீனராகவும், தோழர்கள் தெ. சி. கா. சோமசுந்தரம், திரா. உலகிறைவன், கா. அழகிறைவன், து. பாஸ்கரன், கனி, சரவணப்பெருமாள் ஆகியவர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

## நூதன அபிவிருத்தி சங்கக் கட்டிடத்திற்கு அன்பளிப்பு

பெங்களூரில் "ஆதிதிராவிடர்களின்" முன்னேற்ற ஆக்கவேலைக்கு காருண்யமுள்ள மைசூர் சர்க்கார் இலவசமாகக் கட்டிக்கொள்ள ஒரு சிறிய இடத்தை தந்துள்ளார். முடிப்பதற்கு பண உதவி செய்ய பல பிரமுகர்களுக்கு விண்ணப்பித்துக்கொண்டோம். கீழ்கண்ட அன்பர்கள் அளித்த அன்பளிப்பு:

கோயம்புத்தூர் ஒரு அன்பர் ரூ. 50, தோழர் சே. கிருஷ்ணசாமி சேலம் முனிசிபல் கௌன்சிலர் ரூ. 5, தோழர் பி. ஆர். சுப்பிரமணியம் சேலம் ரூ. 5.

# சோறுபோட்டு உதை வாங்கின கதை

## அம்பேத்கார் கொடுத்த அடி

சென்னையில் தங்களையும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு, ஆனால் திராவிடர் கழகம் என்று சொல்லிக்கொள்ள மாட்டோம், தென் இந்தியர் கழகம் என்றுதான் சொல்லுவோம் என்று சொல்லிக்கொள்ளும் சில நபர்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ஒரு விருந்து நடத்தி அவரிடம் ஆசீர்வாதம் பெற்று விளம்பரம் பெறலாம் என்று கருதி ஒரு விருந்துசெய்தார்கள். டாக்டர் விருந்தை சாப்பிட்டுவிட்டு விருந்து நடத்தியவர்களுக்கு நல்ல அடிகொடுத்து அழவைத்துவிட்டுப் போய்விட்டார். விருந்துகொடுத்தவர்கள் டாக்டரை அனுப்பிவிட்டு மூலையில் இருந்து முக்காடிட்டு ஒப்பாரி வைத்து அழுதவண்ணம் கிடக்கிறார்கள். பாவம் அவர்களை அழாதீர்கள் என்று சொல்லி ஓய வைக்கவும் ஆளில்லாமல் அவர்களாகவே ஓய்வதற்கும் வெட்கப்பட்டுக்கொண்டு கிடக்கிறார்கள், இதுவும் அதிசயம்தான்.

### அம்பேத்கார் பேச்சு

"நண்பர்களே! உங்கள் விருந்துக்கு நன்றிசெலுத்துகிறேன்.

பார்ப்பனரல்லாதார் கட்சி தோற்கடிக்கப்பட்டதானது சரித்திரத்திலேயே குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அதை முன்பு கையாண்ட மக்கள் அதைத் தோற்றுவித்தவர்களின் கருத்துக்கு நேர் விரோதமாக யாரோ சிலர் உத்தியோகம் பெறவும், யாரோ சிலருக்கு உத்தியோகம் தேடிக்கொடுக்கவுமே பயன்படுத்தி வந்ததானது அக்கட்சியையே ஒழித்துப் போகும்படி செய்து விட்டது.

### ஏன் தோற்றது?

20 ஆண்டு ஆட்சி செலுத்தி வந்தும் 1937ம் வருஷ தேர்தலில் இக்கட்சி ஏன் தோல்வி அடைந்தது? வீழ்ச்சி அடைந்த உடன் கட்சித் தலைவர்கள், சீட்டுக் கட்டு வீசி எறிந்தால் அவை திக்குக்கு ஒன்றாய்க் காற்றில் பறந்து ஓடிவிழுவதுபோல் கலைந்து மறைந்துவிட்டதற்குக் காரணம் என்ன? பார்ப்பனர் அல்லாதார் ஓட்டுகள்தானே அதிகமாயிருந்தது? அவர்களிடம் இக்கட்சிக்கு ஏன் செல்வாக்கில்லை? என்பதை யோசியுங்கள்.

### காரணம் தெரியுமா?

இதற்கு முக்கிய காரணங்கள் 2 ஆகும்.

ஒன்று பார்ப்பனர்களுக்கும், இக்கட்சியாருக்காக ஏற்பட்டதோ அந்த பார்ப்பனரல்லாத மக்களுக்கும், எதில் எதில் என்ன என்ன வித்தியாசம் என்பதை இதன் தலைவர்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை. இதன் பேரால் பட்டம்பதவி உத்தியோகம் பெற்று பயனடைந்தவர்களும் நடந்து காட்டவில்லை. அவர்கள் தாங்களாவது உணர்ந்து கொள்ளவுமில்லை.

மற்றும் பிராமணீயத்தை வெறுக்கிறோம் என்று சொன்னார்களே ஒழிய அப்படிச் சொன்ன தலைவர்கள் பிராமணீயத்தைத் தங்கள் வாழ்வில் வெறுக்கவில்லை. அவ்வளவோடு மாத்திரம் இல்லாமல் பிராமணீய அறிகுறிகளாகிய நாமம் முதலிய குறிகளை அணிந்துகொண்டு பிராமணர்களைப் போலவே நடித்து தங்களை (செகண்டுகிளாஸ்) 2-வது வகுப்புப் பிராமணர்கள் என்று தெரியும்படி நடை உடை பாவனைகளில் காட்டிப் பெருமையடைந்தும் வந்தார்கள். பார்ப்பனர்கள் மீது ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாத பிரமுகர்களுக்கு இருந்து வந்த கோபமெல்லாம் பார்ப்பனர்கள் ஏன் தம்மை முதல்வகுப்பு (பஸ்ட் கிளாஸ்) பிராமணர்களாக ஒப்புக்கொள்ளவில்லை என்பதைத் தவிர பார்ப்பனீயம் ஒழிக்கப்பட வேண்டுமே என்கின்ற கவலையே இல்லாமல்போனது பரிதாபகரமான காரியமாகும்.

### பேதம் தெரியவேண்டும்

ஒரு கட்சி இருந்தால் அக்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் அக்கட்சிக்கு எதிரிகளாய், அக்கட்சியாரல்லாதவர்களாய் இருப்பவர்களுக்கும் நன்றாய் பேதம் தெரியும்படியாய் கொள்கைகள், காரியங்கள் கொண்டவர்களாய் இருக்கவேண்டும்.

எதற்காக மற்றக் கட்சியை அல்லது நம் கட்சி அல்லாத மக்களை எதிர்க்கிறோம் என்பது நம் பாமர மக்களுக்கும் ஓட்டர்களுக்கும் தெரியவேண்டாமா? இதில் பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்களுக்கு சிறிதும் கவலை இல்லாததாலும் தாங்களும் பார்ப்பனர்கள் போலவே தங்கள் வாழ்வில் நடந்து தங்கள் வாழ்க்கையில் பார்ப்பனீயத்துக்கு மரியாதையும், பெருமையும் கொடுத்துவந்ததாலும் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு வேர் பூமியில் ஆழம்பட இறங்காமல் போனதோடு சிறியதொரு காற்றில் அது பெரியதொரு வீழ்ச்சியையும் அடைய நேரிட்டுவிட்டது.

### இரண்டாவது காரணம்

கட்சி வீழ்ச்சிக்கும் பாமர மக்கள் அவமதிப்புக்கும் இரண்டாவது காரணமென்னவென்றால், அதன் குறுகிய அரசியல் நோக்கமேயாகும். என்னவெனில் கட்சியின் எதிரிகள் இக்கட்சியாரை "உத்தியோக வேட்டைக்காரர்கள் கட்சி" என்று சொல்லுவதை அறிந்தும் அவர்களுக்கு தக்க பதில் சொல்லும்படியாக நடந்துவரவில்லை. இக்கட்சியாரைவிட இக்கட்சியின் எதிரிகள் அதிகமான உத்தியோக வேட்டைக்காரர்களாக இருந்தும் அவர்கள் தங்களை பாமர மக்கள் அப்படிச் சொல்ல முடியாமல் நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

### "அரசியல் திட்டம்"

பார்ப்பனரல்லாதகட்சியின் உள்ள அரசியல் திட்டம் சர்க்காரை ஆதரிப்பதும், தலைவர்கள் உத்தியோகம் பெறுவதும், இளைஞர்களுக்கு வாங்கித்தருவதும் என்று மாத்திரம் இருந்தால் போதுமா? இது குற்றமில்லை என்றாலும் இது மாத்திரம் இருந்ததாலேயே அது பயன்படாமல் போனதோடு கட்சி வீழ்ச்சிக்கும் இது உதவி செய்யுங் காரணமாய் இருந்து விட்டது.

20 ஆண்டு உயர்ந்த பதவிகள் பெற்று ஆட்சி நடத்தி அநேக பார்ப்பனரல்லாத இளைஞர்களுக்கு உத்தியோகம் கொடுத்தும் ஏன் வீழ்ச்சி பெற்றது. பதவி பெற்றவர்களும், உத்தியோகம் பெற்ற இளைஞர்களும் கட்சியின் நன்மதிப்புக்கு

யாதொரு நன்மையும் செய்ய வில்லை. "கட்சியினால் நாம் முன்னுக்கு வந்தோம், நம் பிள்ளை குட்டி அண்ணன் தம்பி பந்து குடும்பத்தாருக்கு உதவி உத்தியோகம் அளித்தோம்" என்ற விஸ்வாசமோ நன்றி அறிதலோ நினைவோ கூட இல்லாமல் இருந்துவிட்டார்கள். பட்டம் பதவியில் உத்தியோகத்தில் வந்தவர்களும் தங்களையும் தங்களைச் சுற்றியும் பார்த்துக்கொண்டார்களே தவிர பாமரமக்களை, கிராமமக்களை கவனித்து அவர்கள் விவகாரங்களிலும் லேவாதேவிக்காரர்களிடமும், முதலாளிகளிடமும் சிக்கி அல்லல்படுவதை சிறிதாவது கவனித்தவர்கள் அல்ல. இவர்களுடைய இப்படிப்பட்ட காரியங்களை எதிரிகள் பாமரமக்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களை தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள்.

### நிருவாகம் நம் கையில் இருக்க வேண்டும்

நிருவாகம் நம் கையில் இருக்க வேண்டியது அவசியமாகும். நிருவாகம் இருந்தால் எப்படிப்பட்ட சட்டத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அது எப்படிப்பட்டவர்கள் கைக்கு வர வேண்டும் தெரியுமா? வெறும் பிறவியில் பார்பனரல்லாதார் என்று சொல்லிக்கொண்டு தனது நலத்துக்கு அதை ஏணியாய் வைத்துக் கொண்டு பார்ப்பனர்போல் நாமம் போட்டு நடித்துக்கொண்டிருப்பவன் கைக்குப் போனால் பயனில்லை. பதவிக்குப் போனவர்கள், உத்தியோகத்தில் இருப்பவர்கள் 'பார்ப்பனரல்லாதார் நலத்திற்காக என்று சொல்லி இதைப் பெற்றோம். பார்ப்பனரல்லாதார் என்ற முறையில் இதைப் பெற்றோம். ஆதலால் இப்பதவியை— இவ்வுத்தியோகத்தை அதற்குப் பயன்படுத்தவேண்டியது மனிதத் தன்மையாகும்' என்றும் 'நமக்கும் பார்ப்பனனுக்கும் இன்ன பேதம் இருக்கிறது அதற்கு இன்னபடி நடக்க வேண்டும்' என்றும் நன்றி யறிதலும் கண்ணியமும் அறிவும் கடமையும் கொண்டவர்கள் பதவியில் உத்தியோகத்தில் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் பார்ப்பனர்களில் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் பதவியிலே இருக்காமல் இருக்கிறார்கள். பார்ப்பனரல்லாதார்களின் அந்த மறந்துவிடுபவர்கள்தான் அதிகமாக பதவி உத்தியோகங்களில் இருக்கிறார்கள்; அவர்களாலேயே தான் இக்கட்சி பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது. உத்யோக வேட்டைக் கட்சி என்பதை அவர்கள் மெய்ப்பித்தும் விட்டார்கள்.

### கட்சித் தலைவர்

கட்சி என்றால் கட்சிக்கு ஒரு நல்ல தலைவரும் நல்ல திட்டங்களைக் கொண்ட அமைப்பும் வேண்டும். கட்சிக்குபொது மேடைகள் வேண்டும்.

தலைவரைக் குறைகூறுவது நல்ல காரியமல்ல; அது கூடாது.

காங்கிரசைப் பாருங்கள், அதன் தலைவர் காந்தியார்.

1. அவருக்கு முன் யோசனை கிடையாது.
2. பகுத்தறிவு போதாது.
3. விஷய அனுபவம் இல்லாதவர்.
4. அவரது வாழ்வு முழுவதும் தோல்வியிலேயே ஆழ்ந்திருப்பவர்.
5. சிறிதும் யோசியாமல் கரணம் அடிப்பவர்.

இப்படிப்பட்ட ஒருவரை வேறு எந்த நாட்டிலாவது தலைவராகக் கொள்வார்களா? குறைகூறாமல் இருப்பார்களா?

பாகிஸ்தானை ஒருபாபச்செயல் என்றார். அந்த பாபச்செயல் ஒரு பூதமாக வந்து மிரட்டினதும் இப்போது நடுநடுங்கி அதையே கதி என்று இறுகத் தழுவிப் பிடித்துக்கொண்டார். இப்படியெல்லாம் இருந்தும் காங்கிரசில் யாராவது காந்தியாரைக் குற்றம் சொல்லுகிறார்களா? அவரோடு மாறுபட்ட காங்கிரசாரைக் குற்றம் பேசித் திரிகிறார்களா? இன்னமும் காந்தியார் காங்கிரசுக்கு சர்வாதிகாரத் தலைவராகக் கருதப்பட்டுவருகிறார். அவர்மீது எவரும் குற்றப்பத்திரிகை படிப்பதில்லை, அவரை மாற்ற யாரும் நினைப்பதில்லை. ஜனாப் ஜின்னாவோ லீகில் ஒரு சர்வாதிகாரியாய் இருக்கிறார். லீக்கை அவர் தன் இஷ்டப்படி ஆட்டி வருகிறார். முஸ்லீம்களுக்கு அவரிடம் நம்பிக்கை, நன்றி அறிவு இருக்கிறது.

காந்தியாரைக் குற்றம் சொல்லுவது காங்கிரசைக் குற்றம் சொல்லுவதாகும்; காங்கிரசை ஒழிப்பதாகும் என்கின்ற கொள்கைக் கொண்டு இருக்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள்.

ஆதலாலேயே ஜனநாயகத்துக்கு எதிராக ஜனநாயகத்துக்குப் பொருந்தாத காரியங்களை காந்தியார் சர்வாதிகாரமாய் பேசினாலும் செய்தாலும் காங்கிரசார் வாய்மூடி பணிந்து ஏற்று வருகிறார்கள்.

ஆகவே பார்ப்பனரல்லாதாருக்கு நான் சொல்லுவது என்னவென்றால் தலைவர், ஒற்றுமை, தலைவரிடம் மரியாதை ஆகியவைகளில் மற்றக் கட்சிகளைப் பார்த்துப் படித்துக்கொள்ளுங்கள். காலங்கடவா முன்னர் கற்றுக்கொள்ளுங்கள்.

ஆதலால் இன்றைய உங்கள் தலைவரைக் குறைகூறுவதோ மாற்றுவதோ சிறிதும் புத்திசாலித்தனமான காரியமாகாது. காங்கிரஸ்காரர்களுக்கு தலைவர் விஷயத்தில் உள்ள புத்தி உங்களுக்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மதிக்கப்படுவீர்கள்"

என்றும், சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள் மிக அவசியமானதென்றும் தலைவரோடு ஒத்துழைத்து தீர்மானங்களை மதித்து நடந்துகொள்ளுங்கள் என்றும் வலியுறுத்துகிற மாதிரியில் பேசினார்.

விருந்து அளித்தவர்கள் சார்பில் தோழர் பாலசுப்ரமணியம் என்பவர் பேசுகையில், டாக்டர் அம்பேத்கார் அறிவுரைக்கு நன்றி செலுத்துவதாகவும், தலைவரிடத்தில் முழு நம்பிக்கை வைத்து மறுமொழி கூறாமல் பின்பற்றுவதுதான் எங்களுடையதும் எங்கள் கட்சியுடையதும் சம்பிரதாயம் என்றும் ஜனநாயகத்தை வலியுறுத்துவதே நோக்கமே ஒழிய வேறு பிளவு இல்லை என்றும் கூறியவருக்கு நன்றி செலுத்தினார்.

---

கொழும்பு: திராவிட இளைஞர் கழகத்தின் மாதாந்திரப் பொதுக் கூட்டம் 3-9-44-ந் தேதி கொள்ளுப்பிட்டி, காலி ரோட் 159 நெ. இல்லத்தில் தோழர் எஸ். எஸ். நல்லையா பிள்ளை தலைமையில் நடைபெற்றது. 'தீபம்' என்ற பத்திரிகையை மீண்டும் நடத்த அனுமதி அளிக்க தொழில் மந்திரியைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## அம்பேத்கார்-பெரியார் சந்திப்பு

இந்திய மத்திய அரசாங்க நிர்வாக அங்கத்தினர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கி பெரியார் ஈ.வெ. ராமசாமி சென்னை சென்று தனது வரவைத் தெரிவித்துக் கொண்டார்.

டாக்டர் அவர்கள் 12 மணிக்கு வந்து சந்திப்பதாக தெரிவித்து விட்டு சரியாய் 12 மணிக்கு பெரியார் ஜாகைக்கு வந்து சந்தித்து ஒரு மணி நேரம் பேசிக்கொண்டு இருந்து விட்டுசென்றார்.

பேச்சின் முக்கிய சாரம்:

சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை வரவேற்பதாகவும், அதற்கு ஆகவும், அவை யாவும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டதற்கு ஆக பெரியாரைப் பாராட்டுவதாகவும், பட்டம்பதவி ஆளர்களும், பணக்காரர்களும் பதவியே கருமமாய்க் கருதுபவர்களும் முன்னணியிலிருந்து நடத்தப்படும் கட்சி அதுவும் இக்காலத்தில் பயன்தராதென்றும், அவர்களைப் பின் அணிக்குத் தள்ளியது இக்கட்சிக்குப் புத்துயிரளித்தது போல் ஆயிற்றென்றும்,

பார்ப்பனரல்லாதார் கட்சி என்பதின் திட்டங்களின் நம் குறிப்பில் பார்ப்பனருக்கும் நமக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன? அதை ஒழிப்பதற்கு அல்லது அந்த நடப்பை மாற்றுவதற்கு என்று குறிப்பிடும் திட்டங்கள் என்ன? முறைகள் இன்னதென்று வெளியிடாததால் பாமர மக்களிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் ஜஸ்டிஸ் கட்சிக்கு மதிப்பில்லாமல் போனதோடு பார்ப்பனர் இக்கட்சியாரை உத்தியோக வேட்டைக்காரர் என்று சொல்லுவதை பாமர மக்களும் வெளியிலுள்ள அறிஞர்களும் நம்பும்படி ஏற்பட்டு விட்டதென்றும், இதனாலேயே கட்சி 1937-ல் வீழ்ச்சியுற வேண்டியதாயிற்று என்றும் சேலம் தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சியை எல்லா இந்தியக் கட்சியாக ஆக்கக் கூடியதாகுமென்றும் எதிர் காலத்தில் இது மிக சிறந்து விளங்கக் கூடியதாக ஆகி விட்டதென்றும் கூறினார்.

சேலம்தீர்மானம் பிடிக்காததால் கட்சியை விட்டுப்போகிறேன் என்பவர்களைப் பற்றியும், வீண் குறை கூறிக்கொண்டு தங்கள் காரியம் பார்த்துக்கொண்டிருப்பவர்களை பற்றியும் கவலைப்படாமல், பாமர மக்களுடையவும் வெளிநாட்டு மக்களுடையவும் ஆதரவு பெறவும் சர்க்கார் கவனிக்கவும் உருப்படியான காரியம் செய்யவும் நீங்கள் பார்க்க வேண்டும் என்றும், சந்தர்ப்பப்பட்டால் மற்ற ஆள்களுக்கும் இதை வெளிப்படையாய் சொல்லிவிட்டுப் போகிறேன் என்றும் சொன்னார்.

ஜஸ்டிஸ்கட்சி எல்லா இந்தியக் கட்சியாக ஆக இப்போது நல்லசமயமும், நல்ல வேலைத் திட்ட தீர்மானங்களும் இருப்பதால், துணிந்து தைரியமாயும் இந்தியா பூராவும் சுற்றி வேலைசெய்யும்படியும் ஆங்காங்குள்ள தனது நண்பர்களுக்கு எழுதியும் தன்னால் ஆன அளவுக்கு ஒத்துழைத்தும் ஆதரிப்பதாகவும் சொன்னார்.

கடைசியாக திராவிடஸ்தானையும் பாகிஸ்தானையும் ஒன்றாகக் கருதியது தப்பு என்றும், அதன் தத்துவம் வேறு இதன் தத்துவம் வேறு என்றும், அது முஸ்லிம் மெஜாரிட்டி உள்ள இடத்திற்கு மாத்திரம் பொருத்தமானதென்றும், திராவிடஸ்தான் இந்தியா பூராவுக்கும் பொருந்தினதென்றும், பிராமணீயம் இந்தியா முழுமையும் பொருந்த விஷயமென்றும் திராவிடஸ்தானில் தங்களையும் வேறு மாகாணக்காரர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் சொன்னார் என்பதாகத் தெரிகிறது.


இரண்டாம் போர்முனை!
மூன்றாம் போர்முனை!!
நான்காம் போர்முனை!!!
ஐந்தாம் போர்முனை!!!!

★

இவைகளுக்கெல்லாம்
போதிய உதவிகள் வேண்டும்

ஆகவே
இன்னும் அதிகமான
பணம் தேவை

★

மே. த. கவர்னரின்
யுத்த நிதிக்கு
தாராளமாக பணம் கொடுங்கள்

குடி அரசு

1944-ஆம் செப்டம்பர்-மீ 30-உ

# டாக்டர் அம்பேத்கார்

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்திய அரசாங்க நிர்வாக சபை மெம்பர் என்கின்ற முறையில் சென்னைக்கு வந்து 4, 5 நாள்கள் தங்கி இருந்து பல இடங்களில் பேசிவிட்டுப் போயிருக்கிறார்.

அப்படி அவர்கள் பேசிய பேச்சுகளில் பார்ப்பனர்கள் பெரிய உத்தியோகங்களில் பதவிகளில் இருந்தால் எப்படி பார்ப்பனிய ஆதிக்கத்துக்கும் நலத்துக்கும் அனுகூலமாய் வெள்ளையாய் பேசுவார்களோ அதுபோலவே பச்சையாய் பேசுகிறார் என்பது மிகுதியும், அதிசயப்படவும், பாராட்டத்தக்கதுமான காரியமாகும்.

'நம் எதிரிகள் அவரை 'சர்க்கார் தாசர்' என்று சொல்லக்கூடும். அதைப் பற்றி அவர் சிறிதும் பயப்படவில்லை. பதவிக்கு அவர் வந்த உடன் "இந்தப் பதவிக்கு நான் வந்ததின் பயனாய் என் இன மக்களின் நலத்துக்கு இப்பதவியைப் பயன்படுத்த முடியுமானால்—என் இன மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய முடியுமானால் நான் இதில் இருப்பேன் இல்லாவிட்டால் நான் வெளிவந்துவிடுவேன்" என்று சொன்னார். அதுபோலவே பதவிக்கு அவர் சென்றது முதல் ஒவ்வொரு மூச்சிலும் தன் இனத்தின் பெயரையும் நிலைமையையும் எடுத்துச்சொல்லி சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தன் இனத்தின் நலத்துக்கு ஏதாவது காரியங்கள் செய்து கொண்டு எதிரிகளை வெள்ளையாய் கண்டித்துப் பேசி நடுக்கச் செய்தும் வருகிறார்.

அவருக்கு அவருடைய வகுப்பாருடைய ஆதரவு இருக்கிறதா என்றால் அது பூஜ்யம் என்பதோடு இனத்தார் அத்தனை பேரும் தனக்கு ஆதரவளிக்கும்படியான வலிமை பொருந்திய ஸ்தாபனமும் இல்லை; இனத்திற்கு தக்க செல்வமோ செல்வாக்கோ அளித்து வெளிவந்து ஆதரவளிக்கக் கூடிய ஆட்களும் மிகக்குறைவு. 100க்கு 95பேர் ஏழை, கூலி, தரித்திர மக்கள். இப்படிப்பட்ட நிலையில் உள்ள அவர், உத்தியோகம் தனக்கு கிடைக்கத்தக்க விதமாக தனது வாழ்வில் பல அவதாரம் எடுக்காமலும் எதிரிகளிடம் நல்ல பேர் வாங்க—அவர்கள் மெச்சும்படி நடக்காமலும், இந்துக்களையும் இந்து மதத்தையும் இராமாயணம், மனுஸ்மிருதி முதலியவைகளையும் பார்ப்பனர்களையும் பச்சையாய் வைது கண்டித்து சிலவற்றைக் கொளுத்த வேண்டும் என்றும், சிலதை தீயில் கொளுத்தியும் 'நான் இந்து மதத்தை விட்டு வெளியே போய்விடுகிறேன்' என்றும், தேசியம் என்பது புரட்டு, தேசிய சர்க்கார் என்பது பார்ப்பன ஆட்சி, தேசிய சர்க்காரைவிட இன்றுள்ள சர்க்காரே மேல் என்றும், பேசி வருகிறார். மற்றும் தேசிய சர்க்கார் ஏன் கேடு என்றால், "அந்த சுதந்திர தேசிய சர்க்கார் வந்தாலும் அது பார்ப்பன, வர்ணாச்சிரம, சர்க்காராகத்தான் இருக்கும்" என்றும் வெடிவெடிக்கும் மாதிரியில் பேசி, தன் இன மக்களின் நம்பிக்கையையும், பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டு சட்டதிட்டங்களை லட்சியம் செய்யாமல் பேசி வருகிறார்.

இவரை பார்ப்பனர் சபிக்கலாம், காங்கரசுக்காரர்கள் வையலாம், 'தேசியப்' பத்திரிக்கைகள் யோக்கியப் பொறுப்பில்லாமல் எழுதலாம்; மற்றும் வகுப்புப் பேரால் பதவி பெற்று பதவிக்கு போய் வகுப்பை மறந்துவிட்டு தங்கள் குடும்ப நலத்திற்கு ஆக பதவி அனுபவிப்பவர்கள் பொறாமைப்பட்டு "இந்த சனியன்பிடித்த டாக்டர் அம்பேத்கார் நம்ம யோக்கியதை வெளியாகும்படி நடக்கிறாரே" என்று பொறாமையும் ஆத்திரமும் கொள்ளலாம். ஆனால் தோழர் அம்பேத்கார் மேற்கண்டபடி பேசுவதும் நடப்பதும் இந்த நாசமாய்ப் போன சுயமரியாதை அற்ற பார்ப்பனரல்லாத சமுதாயத்தைத் தவிர மற்ற சமுதாயக்காரர்களின் பதவிபெற்ற எவ்வளவு தாழ்ந்த மனிதனும் செய்கிற காரியமே தவிர அம்பேத்காருக்கு மாத்திரம் புதிதல்ல. ஆனால் மற்றவர்களைவிட இவர் சற்று வெளிப்படையாய் பேசுகிறார் எழுதுகிறார் என்று சொல்லிக்கொள்ளலாம். உதாரணமாக டாக்டர் அம்பேத்கார் சென்னை நகரசபை வரவேற்புக்கு பதில் சொல்லும்போது பேசியதை கவனிப்போம்.

"ஒரு கூட்டத்தார் எனக்கு வரவேற்புக் கொடுக்க சம்மதிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அதற்குஆகவே இந்த வரவேற்பைப் பெற நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏன்எனில் இந்த வரவேற்பு சடங்குமுறை வரவேற்பல்ல என்பதும் எனக்கு வரவேற்பு கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பவர்கள் பிடிவாதமாய் இருந்து மெஜாரட்டியாய் இருந்து வெற்றிபெற்று எனக்குக்காட்டிய அன்பென்றும் கருதுவதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று பேசினார்.

அடுத்தாப்போல் தேசியப்பித்தலாட்டத்தை பட்டவர்த்தனமாக்கினார். என்னவெனில்,

"தேசிய சர்க்கார் என்றால் பார்ப்பன சர்க்கார்தானே! 1937ல் தேசியம் வெற்றிபெற்ற 7-மாகாணங்களும் பார்ப்பன முதல் மந்திரிகள் ஆதிக்கத்தில்தானே இருந்துவந்திருக்கிறது. நாளைக்கு எல்லா மக்களுக்கும் ஓட்டு கொடுத்து அதன்மூலம் ஒரு சர்க்காரை ஏற்படுத்தினாலும் அதிலும் பார்ப்பனர்கள் தானே ஆட்சி செலுத்துவார்கள்! இது மாத்திரமா, பெண்களுக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதிலும் பார்ப்பத்திகளே மெஜாரிட்டியாய் வருகிறார்கள்; தொழிலாளருக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதற்கும் பார்ப்பனர்களே பிரதிநிதிகளாய் வருகிறார்கள். இதுமாத்திரமா தீண்டாத வகுப்பாருக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதிலும் பார்ப்பனர்கள் பிடித்துவைக்கிற ஆள்கள் தான் வருகிறார்களே தவிர வேறு யார் வருகிறார்கள்! ஆகவே தேசிய சர்க்கார் என்னும் பித்தலாட்டத்திற்கும் இந்த நாட்டின் மானக்கேடான அரசியல் நிலைக்கும் இந்த உதாரணம் போறாதா" என்று பேசுகிறார்

முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இதற்குப் பார்ப்பனர்கள்தானாகட்டும் தேசியர்கள் தானாகட்டும் என்ன பதில் சொல்லக் கூடும்? "நான்சென்ஸ், ரப்பிஷ்" என்று குரைத்து தங்கள் அயோக்கியத்தனங்களை மறைக்க முயற்சிக்கக் கூடுமே ஒழிய வேறு என்ன சமாதானம் சொல்ல முடியும்? சுயமரியாதை இயக்கம் இல்லாவிட்டால் "இதெல்லாம் (இப்படி பார்ப்பனர் வெற்றிபெற்றது) கடவுள் செயல், அந்தராத்மா கட்டளை" என்று சொல்ல முடியும். இப்போது தலையைக் கவிழ்த்துகொள்ள வேண்டியதைத் தவிர இதற்கு வேறு பதில் இல்லை.

தேசியர்களின் தன்மை இப்படி என்றால் பார்ப்பனரல்லாத கட்சியார் என்று தங்களை சொல்லிக்கொண்டு ஒரு நல்ல கொள்கையையும், பொறுப்பையும் பாழ் அடையும்படி தங்கள் சுயநலத்தையும், வயிறுவளர்ப்பையும், பட்டம், பதவி, உத்தியோகம் முதலியவைகளை மாத்திரம் வேட்டை ஆடுவதில் மூழ்கிக்கொண்டு மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற கவலையற்ற அதிதீவிர சுயநலக்காரர்களுக்கும் சரியான சவுக்கடி கொடுத்து சிறிதாவது உறைக்கும்படி செய்திருக்கிறார். இதற்கு உதாரணமாக கன்னிமாரா ஓட்டலில் டாக்டர் அம்பேத்காரின் ஆசிபெற விருந்துகொடுத்து ஏமாற்றநினைத்த சென்னைத் தோழர்களுக்கு டாக்டர் கூறிய அறிவுரையை கவனித்தால் விளங்கும்.

அவர் பேசியதின் தத்துவமாவது:

"பார்ப்பனரல்லாத தோழர்களே!

உங்களை நீங்கள் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக்கொள்ளுகிறீர்களே! அதில் உங்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் உள்ள பேதத்தைக் காட்டுவதற்குள்ள காரியங்கள் என்ன? அதற்கு உங்கள் கொள்கை என்ன? திட்டங்கள் என்ன? "எங்கள் கட்சி பார்ப்பனீயத்துக்கு மாறான கட்சி" என்று சொல்லிக்கொண்டு நெற்றியில் நாமம், வீட்டில் பார்ப்பன புரோகிதம், நடவடிக்கையில் பார்ப்பனீயத்தைப் பின்பற்றுதல், அவன் பூசை பண்ணு[illegible]லில் சென்று வெளியில் [illegible] வணங்குதல் ஆகியவைகளைச் செய்து உங்களையும் 2-வது வகுப்பு பார்ப்பனர் மாதிரி ஆக்கிக்கொண்டு, முதலாவது வகுப்பு பார்ப்பானாக ஆகஆவதற்கு ஏற்ற வண்ணம் நடந்துகொண்டு வருவீர்களானால் நீங்கள் எந்த தன்மையில் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக்கொள்ள அருகர்கள் ஆவீர்கள்?

பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு முதலாவதும் கடைசியானதுமான கொள்கை "உத்தியோகம்" தானா? அல்லது உத்தியோகத்தில் "சரி பங்கு" என்பது மாத்திரம் தானா? இதைத் தவிர வேறு என்ன கொள்கையை இது வரை பின்பற்றி வந்தீர்கள்? என்பது ஆகக் கேட்டிருக்கிறார்.

மேலும் அப்படியாவது உத்தியோகம் பதவி பட்டம் ஆகியவை அக்கட்சியின் மூலம் பெற்று வாழ்ந்தீர்களே அதற்கு ஆக அக்கட்சிக்கு நீங்கள் காட்டிய நன்றி அறிதல் விஸ்வாசம் என்ன? என்பது ஆகவும் கேட்டிருக்கிறார்.

மேலும் மந்திரி வேலை பார்த்தவர்கள் எங்கே? சேலம் கூட்டத்திற்குப் போனீர்களா? அல்லது நிர்வாகசபைக் கூட்டங்களில் ஏதாவதொன்றுக்கு போனீர்களா? மந்திரிகளின் காரியதரிசிகளாய் இருந்து . ரூ500, 1000 மூட்டை கட்டியவர்கள் எங்கே? இவர்கள் தேர்தலுக்கு நிற்பது, தேர்தலுக்கு பேசுவது தவிர வேறு ஏதாவது பொதுக் கூட்டம் கூட்டி இருப்பீர்களா அல்லது பொதுக் கூட்டத்தில் பேசி இருப்பார்களா? இந்த மந்திரிகளும், அவர்களது காரியதரிசிகளும் சம்பளம் பெற்றது தவிர பார்ப்பனீயத்தில் ஏதாவது ஒன்றை விட்டிருப்பீர்களா? விட்டிருக்காவிட்டாலும் பார்ப்பனீயத்தை வளர்க்காமலாவது இருந்திருப்பீர்களா?

இவைகள் எல்லாம் நாசமாகப் போகட்டும் கட்சியின் பேரால் உத்தியோகம் பெற்ற பெரியவர்கள் யோக்கியதைதான் இப்படி என்றால் கட்சி பேரால் உத்தியோகம் பெற்ற வாலிபர்களிலாவது எவனாவது கட்சிக்கோ கட்சியில் உள்ள மற்ற மக்களுக்கோ ஏதாவது நன்மை செய்தானா என்பதும் விளங்கும்படி பேசினார்.

கட்சித் தலைவர்கள் பார்ப்பனரல்லாத கிராமத்தார்களைப் பற்றி நினைத்தார்களா? எந்தக் கிராமத்திற்காவது எந்தத் தாலூக்காவுக்காவது போய் அங்குள்ள மக்களிடம் கலந்தார்களா? கூட்டங்களுக்குப் போய் பேச்சாளர்களாகப் பேசினார்களா?

என்றும் தைக்கும்படி பேசினார்.

மற்றும் கட்சி விழர்ச்சி அடைந்த பின் மந்திரிகளாய் பட்டம் பெற்றவர்களும் பிள்ளை குட்டிகளுக்குப் பதவியும், உத்தியோகமும் பெற்றவர்களும், மந்திரிகளுக்குக் காரியதரிசியாய் இருந்து பயன் பெற்றவர்களுமான தமிழர் ஆந்திராவுக்குப் போனார்களா? இப்படிப்பட்ட ஆந்திரக்காரர் யாராவது தமிழ்நாட்டுக்கு வந்து பிரசாரம் செய்தார்களா? அல்லது ஆந்திரர்கள் யாராவது ஆந்திராவில் ஒரு கூட்டத்தில் பேசி இருப்பார்களா? தமிழர்கள் யாராவது தமிழ்நாட்டிலோ, மலையாளத்திலோ ஒரு பேச்சு பேசி இருப்பார்களா? என்றும் பொருள்பட அறைந்தார். பதவி அடைந்து பட்டம் பெற்று பணம் சம்பாதித்துக் கொண்டு மேலும் மேலே போக ஆசைப்பட்டு வலை விசிக்கொண்டு அலையும் நீங்கள் உங்கள் நன்றிமறந்த தன்மைக்கும், கவலையற்ற தன்மைக்கும் வெட்கப்படாமல் வருத்தப்படாமல், ஓய்வொழிச்சல் இல்லாமல் ஏதோ ஒரு சிறிதாவது வேலை செய்து கொண்டு இருக்கிறவர்களையும், அதுபோன்ற கட்சித் தலைவனையும் குற்றம் கூறி வீரம் பேசுவதை கட்சி வேலை என்று கருதுகிறீர்களே இது ஒழுங்கா?

மற்றக் கட்சிகளைப் பாருங்கள். அக்கட்சித் தலைவர்களின் தன்மையைப் பாருங்கள். கட்சியின் மக்களை, பின்பற்றுவோரைப் பாருங்கள். உங்களைப் போன்று குறைகூறித் திரியும் ஆள்கள் அங்கு எதிலாவது யாராவது இருக்கிறார்களா?

என்றும் விளாசி இருக்கிறார்.

"உங்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் பேதம் காட்டி பார்ப்பனீயத்

ரோஜா முத்தையா

தில் இருந்து நீங்கள் விலகாததாலேயே தோற்றீர்கள் அதனாலேயே உங்களுக்கு செல்வாக்கில்லை இப்படியே இருந்தால் இனியும் நீங்கள் என்றென்றும் உருப்படமாட்டீர்கள்'' என்னும் எச்சரிக்கையான அறிவுரை பகர்ந்திருக்கிறார்.)

விருந்து நடத்தியவர்கள் இவ்வளவு அடியையும், இடியையும் பெற்றுக்கொண்டு டாக்டர் அம்பேத்காருக்கு நன்றி செலுத்திவிட்டு, "நாங்கள் தலைவரிடம் முழு நம்பிக்கையுடனும் பக்தி விசுவாசத்துடனும் தலைவர் கட்டளைக்கு மறுமொழி கூறாமலும்தான் நடந்துகொள்ளுகிறோம் அதுதான் எங்கள் கட்சி சம்பிரதாயம்—ஆனால் ஜனநாயகம் வேண்டும் என்றுதான்சொல்லுகிறோம் என்று பதில் சொன்னார்களாம். அதுவும் யார் சொன்னார்கள் என்றால் சேலம் மாநாட்டுக்கு வந்து "பெரியாரைத் தவிர உலகம் முழுவதும் தேடியும் வேறு தலைவர் கிடைக்கவில்லை. நான் ஒரு காலத்தில் தலைவர் பதவிக்கு சிபார்சு செய்த சர் ஷண்முகம் செட்டியார் முதலியவர்கள் கட்சிக்கு துரோகிகளாகவும், வஞ்சகர்களாகவும், ஆகிவிட்டார்கள். ஆதலால் பெரியாரே எங்கள்நிரந்தரத் தலைவர். அவரைநாங்கள் என்றும் பின்பற்றுவோம். அவரே லெனின்; அவரே மார்க்ஸ்; அவரே திராவிட நாட்டுக்கு பிரசிடெண்டு'' என்று கூறி மக்கள் கைதட்டுதலைப் பெற்றுக்கொண்டு பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டு ஓடினவர்களும் ஊருக்கு இரண்டு மைல் தூரத்தில் போலீஸ் பந்தோபஸ்தை வைத்து தங்கள் ஆளுகளைத் தவிர வேறு யாரையும் உள்ளே விடாமல்நடத்துவேலைக்காரர்கள் உட்பட 20, 30 பேர்கள் இருந்து கொண்டு ஏதோ பேசி எதையோ எழுதிக் கொண்டு 'நாங்கள் தலைவரை நீக்கிவிட்டோம்; வேறு தலைவரை நியமித்து விட்டோம்' என்று வெளிப்படுத்தின மூன்றே முக்கால் பேர்வழிகள் தான் இந்த ஜனநாயகம் பேசியிருக்கிறார்கள்.

அது ஒருபுறமிருக்கட்டும். இவைகளிலிருந்து டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒரு தைரியசாலி என்பதும் மனதில் உள்ளதை

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

...சுகிறவர் என்ப... பொது வாழ்வு பட்ட... கோ பதவிக்கோ பண சேகரிப்புக்கோ, விளம்பரத்திற்கோ அல்லாமல் ஒரு பொது இலட்சியத்திற்கு என்பதும் நன்றாய் விளங்கும்படி நடந்துவந்திருப்பதோடு சென்னைக்கு வந்ததிலும் அப்படியே நடந்துகொண்டிருக்கிறார் என்பதும் நன்றாய் விளங்கும்.

இதே சந்தர்ப்பத்தில் நம் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாத தலைவர்கள் பிரமுகர்கள் மந்திரிகள், மந்திரிகளின் காரியதரிசிகள், மந்திரிகளுடன் சுற்றித்திரிந்து கொண்டு பயன்பெற்றும், பதவி பெற்றும், வயிற்றுப் பிழைப்பும், வாழ்க்கை நடத்திக்கொண்டும் இருந்த மக்களின் யோக்கியதையும் நினைத்துப் பாருங்கள்.

## காந்தி-ஜின்னா

### பேச்சு முறிந்துவிட்டது.

"காந்தி-ஜின்னாபேச்சு முறிந்துவிட்டது'' என்று முடிவாய்விட்டது.

இந்தப்பேச்சு துவக்கப்படும் முன்பே, அதாவது ஒரு மாதத்திற்கு முன்பே பெரியார், ஜின்னா அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் "நீங்களும் காந்தியாரும் கலந்து பேசப்போவதாக பத்திரிகைகளில் பார்த்தேன். அதில் ஏதாவது நடவடிக்கை நடக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் ஒரு காரியம் உண்டாகலாம். அதாவது நம் எதிரிகள் மனதில் ஒரு மாற்றம் ஏற்பட்டு அவர்களாகவே வந்தார்கள் என்கின்ற ஒரு காரியம் ஏற்படும்'' என்று எழுதி இருக்கிறார்கள். இன்று அதுபோலவேதான் காரியங்கள் நடந்தன. அன்றியும், 'குடி அரசி'ன் 19-8-44 தலையங்கத்திலும் "காந்தி-ஜின்னா சந்திப்பு'' என்கின்ற தலைப்பில்,

"காந்தியார் தனது நண்பர் இராஜகோபாலாச்சாரியாருடன் ஜின்னா சாயபைச்சந்திக்க 19ஆந் தேதி சனிக்கிழமையன்று புறப்படுவதாகச் சேதி வந்திருக்கிறது. இவர்கள் மூவரும் சந்திப்பதும், சந்தித்துப் பேசுவதும்ஆன காரியத்தில் யாதொரு பயனும் ஏற்படாது'' என்பதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

மற்றும் 'குடி அரசு' 16-9-44ந் தேதி தலையங்கத்தில் "ஜின்னா-காந்தி பேச்சு'' என்ற தலைப்பில்,

"இவர்கள் (காந்தி-ஜின்னா) பேச்சில் ஆகப்போகிற காரியம் ஒன்றும் இருக்கமுடியாது என்போம்'' என்று எழுதியிருக்கிறோம்.

ஆகவே இந்த முறிவில் அதிசயம் ஒன்றும் இல்லை. பெரியார் எழுதினதும் 'குடி அரசு' எழுதினதும் தான் நடந்தது. நிற்க ஏதாவது ஆவதாகவே வைத்துக்கொண்டு பார்த்தாலும் என்னதான் ஆயிருக்க முடியும் என்பது யோசிக்கத்தக்கது.

ஜின்னா அவர்கள் முஸ்லிம்களைப் பற்றித்தான் பேச முடியும் வேறு யாரையும் பற்றி பேச முடியாது; மற்றவர்கள் அவரவர்கள் வேலையை அவரவர்களே பார்த்துக் கொள்ள வேண்டியது என்று தெளிவாய்ச் சொல்லிவிட்டார். அன்றியும் அவர் பேசப்போவதாகச் சொல்லும் முஸ்லிம்கள் யார்?, எந்த முஸ்லிம்களுக்காக என்று பார்த்தால் அதுவும் தெளிவாகும். அதாவது, சில எல்லைக்குட்பட்ட சிறு இடங்களில் உள்ள முஸ்லிம்களைப் பற்றியாகத்தான் இருக்கக் கூடும். ஏனெனில் பாகிஸ்தான் சில குறிப்பிட்ட பிரதேசங்களின் அதுவும் முஸ்லிம்கள் அதிகப்படியாய் இருக்கும் ஜில்லாக்களின் பிரிவினையை மாத்திரம் கொண்டதாகலாம். ஆகவே ஜனாப் ஜின்னா அவர்கள் காந்தியாரிடம் பேசுவதனால் தனக்கு எவ்வளவுதான் வெற்றி ஏற்பட்டதாக வைத்துக்கொண்டாலும் அதில் இந்த குறிப்பிட்ட பிரதேச முஸ்லிம் மக்களைத் தவிர மற்ற எந்தப் பிரதேசத்திற்கு எந்த இன மக்களுக்கும் எவ்வித நலமும் எதிர்பார்க்கவோ பயனடையவோ முடியாதபடி தான் இருக்க முடியும். அன்றியும் காந்தியாருக்குத்தானாகட்டும் அவர் தனது பேச்சால் வெற்றி பெற்றிருந்தாலும், முஸ்லிம்களோடு துவேஷப் புத்திகொண்ட கூட்டத்தினருக்கு மாத்திரம் தான் ஏதாவது பலன் தருமே தவிர

மற்ற பொது மக்களுக்கோ நாட்டின் சமாதானத்தை விரும்புகிறவர்களுக்கோ என்ன பலனோ நலனோ ஏற்படக் கூடும்? ஆகவே இவ்விருவர்களுடைய பேச்சு முறிந்து போவதும், வெற்றி பெறுவதும் நம் நாட்டவர்களுக்கு ஒரே பலனைக் கொடுக்கக் கூடியதாகத்தான் ஆகிவிட்டதே தவிர மற்றபடி கவலை தரக் கூடியதாக அதில் ஒன்றும் காணமுடியவில்லை, ஆனால் பத்திரிகைக்காரர்களுக்கு நல்ல சேதி வேட்டை கிடைத்தது என்பதும், இரு தலைவர்களும் பொது மக்கள் கவனத்திற்கு நன்றாக இழுக்கப்பட்டார்கள் என்பதும் கொண்டு தனிப்பட்ட முறையில் அவர்களைப் பொறுத்தவரையில் பலனில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் இதன் பின் விளைவு இன்றைய நிலைமையை விட மோசமாகப் போய்விடுமோ என்னமோ என்னும் கவலையோடு அப்படி ஏற்படக்கூடாது என்று ஆசைப்படுகிறோம். இந்த ஆசையில் நாட்டில் உள்ள மற்ற பொதுநல மக்களும் கலந்து கொண்டு இந்த ஆசை வெற்றி பெற உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம்.

## இன்னுமா பார்ப்பன ஆதிக்கம்?

தென் இந்திய ரயில்வே-தனிப்பட்ட கம்பெனியார் வைத்து நடத்திவந்த காலையில், ரயில்வே சிற்றுண்டி, உணவு விடுதிகளில் இருந்துவந்த பார்ப்பனர் உண்ணுமிடம், பார்ப்பனரல்லாதார் உண்ணுமிடம் என்றிருந்துவந்த பேதம் பெரியார் அவர்களின் கிளர்ச்சியினால் நீக்கப்பட்டது. இன்று, ரயில்வேக்கள் நமது சர்க்கார் நிர்வாகத்திற்குள் வந்துவிட்டது. அப்படி இருந்தும் அவ்விடுதிகளில் இருந்து வரும் பார்ப்பன ஆதிக்கம் நீங்கவில்லையென்பதை அறிய வருந்துகிறோம். ஏனெனில், விடுதிகளின் இன்ஸ்பெக்டர்களும் மானேஜர்களும் இனியும் பார்ப்பனராகவேயிருந்து வருகிறார்கள். இதனால் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் வேற்றுமை நீக்கப்பட்டாலும், பார்ப்பனர் ஆதிக்கம் நீங்கவில்லை யென்பது விளங்கவில்லையா? இவ்விடுதிகள், பொது விடுதிகள்—சர்க்கார் நிர்வாகத்திலிருந்து வரும் ரயில்வே அதிகாரிகளால் நடத்தப்படும் விடுதிகள்—இவைகளில் ஒரு குறிப்பிட்ட இனத்தார் தான் ஆதிக்கம் செலுத்தலாம் என்பது அநுமதிக்கலாமா? ஆகவே இந்நிலைமையை எஸ். ஐ. ஆர். பிரதம கமர்ஷியல் சூப்ரண்டு தோழர் எச். ஜெ. கிரேன் அவர்கள் அநுகூலமாய் கவனித்து நலம்செய்து நம்மை வேறு பரிகாரம் தேட முயற்சிக்கவிடாமல் உதவுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

## கோவை ஜில்லா தோழர்களுக்கு வேண்டுகோள்

தோழர்களே,

சேலம் மாநாட்டில் பெரியார் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாமும் நமது ஜில்லா தோழர்களை திராவிடர் (ஜஸ்டிஸ்) கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அதற்கிணங்க பல இடங்களிலிருந்து ரசீது புத்தகங்கள் கேட்டுக் கடிதங்கள் வந்தன. அதன்படி ரசீது புத்தகங்கள் அனுப்பப்பட்டன. இன்னும் எங்கெந்த தாலூக்காக்களில் கழகங்கள் நிறுவப்படவில்லையோ, அங்கெல்லாம் கழகங்கள் நிறுவி அங்கத்தினர்கள் சேர்க்க வேண்டுகிறோம்.

அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இந்த ஜில்லாவில் சேர்க்கப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கையை வெளியிட எண்ணியுள்ளோம். ஆதலால் இந்த ஜில்லாவில் அக்டோபர் முதல் தேதி வரை சேர்க்கப்பட்டுள்ள அங்கத்தினர் எண்ணிக்கையை உடனே எங்களுக்கு எழுதியனுப்பக் கோருகிறோம்.

பி. பழனிச்சாமி,
எஸ். ஆர். சந்தானம்,
காரியதரிசிகள்.

## மதுரை சித்தவைத்திய சங்கம்

மதுரை சித்தவைத்திய சங்கம் 16, 17-வது ஆண்டு நிறைவு விழா மதுரை, மேலச்சித்திரை வீதி அன்னக்குழி மண்டபத்தில் டாக்டர் சி. எ. சின்னு நாயுடு அவர்கள் தலைமையில் 30-9-44-ந் தேதி நடைபெறும்.

மறுநாள் (1-10-44) நிர்வாகத் தேர்தலும் நிர்வாக உத்தியோகஸ்தர் தேர்தலும் நடைபெறும்.

## இந்து சட்டச்சீர்திருத்த மகாநாடு

சென்னை, தமிழர் நல்வாழ்க்கைக் கழகம், 1-9-40 நிறுவிய இந்து சட்டச் சீர்திருத்த உட்கழகத்தின் ஆதரவில் சென்னையில் 1-10-44 ஞாயிற அன்று மாலை உட்கழகத்தார் தயாரித்த இந்து சட்ட திருத்தத்தைப் பற்றி யோசிக்க இந்து சட்டச்சீர்திருத்த மாநாடு ஒன்று கூடும்.

ப. க. குருசாமி.

## நெல்லை மாவட்டத் திராவிடர் கழக அறிக்கை

தூத்துக்குடி—

நெல்லை மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்களெல்லாம், சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி, திராவிடர் கழகமென பெயர் மாற்றிக் கொள்ளவும், அங்கத்தினர் சேர்க்கும் புத்தகத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுவதுடன், இயக்கத்தின் வேலைத் திட்டத்திற்கும், பிரச்சாரத்திற்கும் மாவட்டக் கமிட்டியுடன் தொடர்பு வைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்வதுடன் மாவட்டமெங்கும் சுற்றுப் பிரச்சாரஞ்செய்து, கழகம் நிறுவி, அங்கத்தினர்கள் சேர்க்க வருகிறோமாகையால் இயக்கத்தோழர்கள் உதவிபுரியும்படி கோருகிறேன்.

எம். எஸ். சிவசுவாமி,
செயலாளர்.


ஒலிபெருக்கி ஏற்பாடுகளுக்கு

நேஷனல் ரேடியோஸ்

கும்பகோணம்.

## பெரியார்-மூஞ்சே சந்திப்பு

(தந்தி)

இந்துமகாசபைத் தலைவர்களான டாக்டர் மூஞ்சே, டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலியோர்கள், பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்களை 29-9-44-ந் தேதி மாலை 4 மணிக்கு திருச்சி தோழர் டி.பி. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் கண்டு பேசினார்கள். அதுசமயம் பெரியாருடன் தோழர்கள் சி.டி. நாயகம், சி.என். அண்ணாதுரை, டி.பி. வேதாசலம், கே.வி. அழகிரிசாமி, என். சங்கரன் முதலியவர்களும் இருந்து பேசினார்கள்.

பேச்சின் முடிவு பெரியார் மூஞ்சே ஆகிய இரு தலைவர்களும் மிக்க மகிழ்ச்சியோடு நண்பர்களாகி அவரவர்களின் அடிப்படையான கொள்கைக்கு பாதகமில்லாமல் ஒத்துழைக்கும் விருப்பத்துடன் பிரிந்தார்கள். சு.ம. கொள்கைகளை பெரிதும் டாக்டர் மூஞ்சே அவர்கள் சொந்த முறையில் ஒப்புக்கொண்டு தனது கட்சிக்கு வைத்து வடநாட்டிலும் அதை பிரசாரம் செய்ய முயற்சிப்பதாய் சொன்னதாகத் தெரியவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## சேலம் தியாகராயர் சங்கம்

சேலம் அம்மாப்பேட்டை சர் தியாகராயர் வாலிபர் சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 2-10-44 திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு ஷை சங்க உபதலைவர் எஸ். எஸ். பழனிச்சாமி இல்லத்தில் நடைபெறும். அதுசமயம் சேலம் மாநாட்டின் தீர்மானங்களை ஆதரித்தும், ஷை சங்கத்தை 'திராவிடர் கழகம்' என பெயர் மாற்றவும் மற்றும் இதர தீர்மானங்களை தீர்மானிக்கவேண்டி இருப்பதால் ஷை கமிட்டி மெம்பர்கள் இதையே அழைப்பாக கருதி வரவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## திருவண்ணாமலை தெ.இ.ந.உ.சங்க கூட்டம்

1-10-44ந் தேதி ஞாயிற்றுக்கிழமை திருவண்ணாமலை திருவூடல் தெரு ஆ.க. பொன்னுசாமி முதலியார் மெத்தை கட்டடத்தில் ஷை கூட்டம் நடைபெறும். அது சமயம் திருவண்ணாமலை, போளூர், செங்கம் தாலூக்கா சங்க உறுப்பினர்கள் யாவரும் தவறாது கலந்துகொள்ளும்படி கோரப்படுகிறது.

## கோவை சுயமரியாதை மாநாடு

தோழர் சி.என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் 1-10-44-ந் தேதி காலை 9 மணிக்கு அவனாசி ரோடு U. M. S. பஸ் ஸ்டாண்டு கொட்டகையில் நடைபெறும்.

## சிதம்பரத்தில் பொதுக் கூட்டம்

8-10-44-ல் இங்கு நடக்கப் போகிற வர்ணாச்சிரம மாநாடு திராவிடர்களை இழிவுபடுத்தக் கூடியதென்பதை எடுத்துக் காட்டுவதற்காக 7-9-44 சனி மாலையில் வர்ணாச்சிரமக் கொடும்பாவி கட்டி இழுக்கப்பெற்றுத் தீ மூட்டப் பெறும். தீ மூட்டும் சொற்பொழிவாளர்களாக தோழர்கள் தளபதி சி. என். அண்ணாதுரை, கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி, வேலூர் சி. பி. சிற்றரசு, மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், மற்றும் நெடுஞ்செழியன், மன்பதைக்கன்பன் முதலானோரும் கலந்து கொள்வர். 8-10-44 காலையில் கொடி ஊர்வலம் நடைபெறுவதோடு கேள்வித் தாள்களும் வழங்கப்பெறும் என சிதம்பரம் திராவிடர் கழகத்தார் தெரிவிக்கின்றனர்.

## மறைவு

திருச்சி மாவட்டம் லால்குடி தாலுகா, மணக்கால் திராவிட கழகத் தலைவர் தோழர் ம. கு. இலக்குவன் நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டு 21-9-44-ஆந் தேதி தமது இல்லத்தில் இயற்கையெய்தினார் என்பதை யறிந்து வருந்துகிறோம்.

அன்னார் இயற்கை எய்தியதை முன்னிட்டு 1-10-44-ஆந் தேதி காலை 8 மணிக்கு இறுதிக் கடன் நிகழ்ச்சிகள் மலட்டாற்றங் கரையில் நடைபெறுமென அன்னாரது சகோதரர் தோழர் எம். கே. ராமசாமி அறிவிக்கிறார்.

## பிரபல ஷாப் வியாபாரிக்கு தண்டனை

ஈரோடு: ஸ்டேஷனரி சாமான்களை அதிக விலைக்கு விற்றதாக பிரபல ஷாப் வியாபாரம் கிருஷ்ணா அண் கோ தோழர்கள் ஆர். ராமச்சந்திரராவ், இ. ஆர். மாதவராவ் ஆகியவர்கள்மீது தொடரப்பட்ட வழக்கில், ஈரோடு டிப்புடி கலெக்டரால், 27-9-44உ பதுக்கல், கொள்ளை லாபம் என்ற குற்றம் சாட்டி முதல் எதிரிக்கு 3 மாத கடுங்காவலும் ரூ. 900 அபராதமும் இரண்டாவது எதிரிக்கு 3 மாத கடுங்காவல் தண்டனையும் ரூ. 1500 அபராதமும் தண்டனை விதிக்கப்பட்டனர். 29-9-44-ஆந் தேதி மாலை அவர்கள் ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

## திண்டுக்கல்லில் "போர் வாள்"

30-9-44-ஆந் தேதி முதல் திண்டுக்கல் ஜெய விலாஸ் எலெக்ட்ரிக் தியேட்டரில் திராவிட புது மலர்ச்சி நாடக சபையாரால் (தோழர்கள் எம். ஆர். ராதா, சி. பி. சின்னராசு முதலிய நடிகர்களால்) "போர் வாள்" நாடகம் நடைபெறும்.

## பகுத்தறிவு புலவர்கள் மாநாடு

ஷை மாநாடு ஒன்று கூட்டவேண்டியதின் அவசியத்தைச் சென்ற வார இதழில் நாம் வெளியிட்டதற்கு பல பகுத்தறிவுப் புலவர்கள் தங்கள் முகவரிகளை அனுப்பியுள்ளார்கள். மற்றுமுள்ள பல பகுத்தறிவுப் புலவர்களும் தங்கள் முகவரிகளை உடனே அனுப்பிவைக்க வேண்டுகிறோம். ஷை மாநாடு கோவையில் ஒரு பிரபலஸ்தர் ஆதரவில் விரைவில் நடத்தப்படும்.

பகுத்தறிவுப் புலவர் கூட்ட மாநாட்டுச் செயல் நிலையம், ஈரோடு.

K. A. Mala's
Selvam Memorial Sports Club,
(Estd: 1941)
No. 91, Monegar Choultry road,
Washermenpet, Madras.
DONATION RECEIPT
THE POOR BOYS' FREE NIGHT SCHOOL FUND
8 Annas 8

| | |
|---|---|
| 1st Prize | Rs. 50. |
| 2nd ,, | Rs. 30. |
| 3rd ,, | Rs. 20. |

Result on the 1st January 1945 at 6 P.M.
Tickets are available from the above Club.
Help the Poor Boys.

ரோஜா முத்தையா

## பெரியார் ஈ. வெ. ராவின் 66-வது ஆண்டு விழா

சேலம் அரிசிபாளையம் திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) த்தார் பெரியாரின் 66 வது ஆண்டு விழா விரைவில் சிறப்பாக கொண்டாடப்பெறும்.

அவ்விழாவில் பெரியார் தொண்டு பற்றித் தோழர்கள் டார்பிடோ ஜனார்த்தம், புள்ளிவீரர் நெடுஞ்செழியன் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

அரிசிபாளையம்,
திராவிடர் கழகத்தார்.

## சென்னையில் திருக்குறள் சொற்பொழிவுகள்

சென்னை, புரசை, பெருமாள் பேட்டை, வேங்கடேச பத்தன் வீதி, இராமச்சந்திர ஆரம்பப் பாடசாலையில், 23-9-44, 30-9-44, 7-10-44, 14-10-44 ஆகிய தேதிகளில் திருக்குறள் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும்.

## உதயம்

10-10-43-ல் மதுரை செ. இ. ச. உ. சங்கத்தில் திராவிடர் தொண்டர் படையின் ஆதரவில் விதவா விவாகம் செய்து கொண்ட அருப்புக்கோட்டை சண்முகவேலுவின் துணைவியார் லட்சுமியம்மாள் 3-9-44-ல் ஆண் மகவைப் பெற்றதைக் குறித்து 'குடி அரசு'க்கு ரூ. 2-ம் 'திராவிடநாடு'க்கு ரூ. 2-ம் நன்கொடை அளித்துள்ளார்கள்.

## வட சென்னை ஆலோசனைக் கூட்டம்

சென்னை வண்ணாரப்பேட்டை தனலட்சுமி பாடசாலையில் 1-10-44 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஓர் ஆலோசனைக் கூட்டம் தோழர் எம். ஆர். பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் வடசென்னையில் திராவிடர் கழகம் ஒன்றை மத்திய சங்கமாக அமைத்து, மாகாண திராவிட கழகத்திற்கு அங்கத்தினர்களை அமைக்கவும், அவர்களிடம் சந்தா வசூல் செய்யவும், இராயபுரம், வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை வாசிகள் ஆகியவர்களை அழைத்து மேற்படி கழகம் அமைக்கவும் அதற்கு வேண்டிய திட்டங்களை அமைக்கவும் வேண்டியதாய் இருப்பதால் வடசென்னையிலுள்ள நம்மியக்கத் தோழர்கள் அனைவரும் வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

டி. வி. சுந்தரமூர்த்தி.

## ஆரணி திராவிட இளைஞர் கழகம்

17-9-44ல் மேற்படி கழகக் கட்டிடத்தில் இவ்வூர் பேங்கர் தோழர் கன்னையா அவர்கள் தலைமையில் மேற்படி கழகம் கூடி, கழகத்திற்கு எ. கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைவராகவும், கே. ஜம்புலிங்கம் துணைத்தலைவராகவும் மற்றும் செயலாளர்கள் நிர்வாக அங்கத்தினர்கள் யாவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

சேலத்தில் நடந்த மாகாண மாநாட்டின் தீர்மானங்கள் முழுவதையும் இக்கழகம் ஆதரித்து ஏற்றுக்கொள்ளுகிறதென்றும், மாகாண மாநாட்டின் கட்டளைபடி திராவிடர் கழகத்திற்கு சீரான மான அங்கத்தினர்களை சேர்ப்பது என்றும் இன்னும் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

## அநுதாபம்

சென்னை: தோழர் கே. ஆர். ரங்கசாமி அவர்கள் மகள் ருக்மணி அம்மாள் சில நாள் நோய்வாய்ப்பட்டு 10-9-44-ந் தேதி திருவேட்டீச்வரன்பேட்டையிலுள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தியது. மகளின் பிரிவால் வருந்தும் பெற்றோர்களுக்கு எனது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என கே. எம். எல்லப்பனார் எழுதுகிறார்.

## கொழும்பு சுந்தரராஜ்

கொழும்பு: தோழர் க. கொ. சுந்தரராஜ் 6 மாதங்களுக்கு இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்யப்போவதால், அவர் பல கழகங்களில் வகித்து வந்த பதவிகளை மற்ற தோழர்கள் பொறுப்பேற்று நடத்தவேண்டுமென்றும், இம்மாதம் கடைசியிலிருந்து நம் இயக்கப் பத்திரிகைகளை அவருக்கு அனுப்புவதை நிறுத்திவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறார்.

## அநுதாபம்

தங்கவயல் தோழர் டி. ஆர். சேகரன் அவர்களின் தந்தையார் 18-9-44-ந் தேதி இயற்கையெய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறோம். அவரது பிரிவாற்றாமையால் வருந்தும், அன்னார் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம் என்று செங்கை தோழர்கள் எஸ். சி. கணபதி, சி. துரைராஜ் ஆகியவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மறைவு

திருச்சி: பாலக்கரை தோழர் செளந்தரராஜன் அவர்களின் மனைவி மேரி 23-9-44-ந் தேதி மறைந்தது கேள்வியுற்று வருந்துகிறோம்.

## சென்னையில் திராவிடன் வெற்றி

ஜெமினி நந்தனார் 10,000 ரூபாய் போட்டிப்பரிசில் கலந்துகொண்டவர்களுள் யானும் ஒருவன். ஆதலால் எனக்கு 1-9-44ல் ஜெமினியின் பரிசு முடிவில் ரூ. 400 சென்னை வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழக சார்பில் கிடைத்ததை மிக மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவிர சென்னையில் அநேக பார்ப்பனர்கள் இப்போட்டியில் மிக ஊக்கமாக இருந்தும் அவர்களை தோல்வியுறச் செய்து யான் சென்னையில் ஒரே பரிசாக பெற்றேன். சென்னையில் வேறு யாருக்கும் பரிசு கிடையாது. இச்சம்பவத்தைக்கண்ட இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் 18-9-44 தேதி எனக்கு ஓர் வாழ்த்தும் அனுப்பியுள்ளார். இதைத்தவிர அப்பணத்தில் தமிழ் இளைஞர் கழகத்திற்கும், வடசென்னை சௌந்தரபாண்டிய வாலிப கழகத்திற்கும், திருவேங்கடராயுடு இலவச வாசகசாலைக்கும், ஜெகன்மோகன் ஆரம்பபள்ளிக்கூடத்திற்கும் பல சாமான்களை தகுந்த முறையில் நன்கொடையாக வழங்கியுள்ளேன்.

T. V. சுந்தரமூர்த்தி.

## பிறப்பு

திருவாரூர்: தோழர் வி. ரெங்காராசு அவர்கள் தம்பதிக்கு ஒரு ஆண் மகவு பிறந்திருக்கிறது.

## தூத்துக்குடியில் பாலதண்டாயுதம் ஓட்டம்

தூத்துக்குடி: 1-9-44-ந் தேதி ஜிம்கானா தருவை மைதானத்தில் தோழர் எ. சி. பால் (வழக்கறிஞர்) தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய கே. பாலதண்டாயுதம் அவர்களிடம் பொது மக்கள் சார்பாக 10 கேள்விகள் அடங்கிய ஒரு கேள்வித் தாள் தோழர் கெ. தானமுத்துவால் கொடுக்கப்பட்டது. கடைசியில் பதில் சொல்லுவதாகச் சொல்லித் தப்பித்து ஓட எத்தனிக்கையில் பொது மக்கள் பதில், பதில் என்று கூப்பாடு போடவே, கடைசி இரண்டு கேள்விகளுக்கு பொருத்தமற்ற பதில் சொல்ல, பொது மக்கள் மறுத்தார்கள். சரியான பதில் சொல்லமுடியாமல் தோழர் பாலதண்டாயுதமும் அவரது கோஷ்டியாரும் பெஞ்சு, நாற்காலி, லைட் முதலியவற்றை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். ஆனால் அதே இடத்தில் தோழர் எ. மு. முகம்மது கனி ஜின்னா தலைமையில் பொது மக்கள் நிலா வெளியில் கூடி தோழர் கெ. தானமுத்துவைக் கொண்டு பேசிப் பொதுவுடைமையைக் குறித்துப் பேசச்செய்து அமைதியுடன் கலைந்தனர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிட நாட்டுச் செய்திகள்

தூத்துக்குடி: சர் ஏ. டி. பன்னீர்செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கத்தின் ஆதரவில் 4-9-44ல் தோழர் பே. வ. த. ரத்தினம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், கஸ்தூரிபாய் நிதிக்காக பொதுமக்கள் பணத்திலிருந்து ரூ.2000 கொடுக்க தூத்துக்குடி நகரசபையார் செய்த தீர்மானத்தைக் கண்டித்தும், 27-8-44ல் சேலத்தில் நடைபெற்ற 16-வது மாகாண - தெ. இ. ந. உ. சங்க மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் பெரியார் மீது போலி பிரச்சாரம் செய்யும் கட்சி களையான்களை கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

* *

கோவில்பட்டி: 5-9-44ல் விருதை தோழர் ஜேம்ஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் நெல்லை மாவட்ட தாழ்த்தப்பட்டோர் மாநாட்டுப் பிரசாரகர்கள் சொற்பொழி வாற்றினார்கள்.

* *

கோட்டாறு: காஞ்சி திராவிடர் தொண்டர் படையின் முதலாவது பொதுக் கூட்டம் தாமரைக்குளத்தில் 1-9-44-ல் நடந்தது. திராவிடநாட்டு பிரிவினை குறித்து விளக்கிப் பேசப்பட்டது. இரண்டாவது பொதுக் கூட்டம் 2-9-44-ல் புதூர்மருங்கூரில் நடந்தது. பல தோழர்கள் பேசினார்கள்.

* *

ஸ்ரீநிவாசநல்லூர்: முத்துராஜா வாலிபர் சங்கக் கூட்டம் 4-9-44-ல் தோழர் வி. முத்துவீர முத்துராஜா தலைமையில் நடைபெற்றது. முத்துராஜா ஜாதியினர் படிக்க ஒரு பள்ளிக் கூடமும், சங்கத்திற்கு ஒரு கட்டிடமும் கட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* *

திருமழப்பாடிவட்டம்: செம்பியக்குடியில் 27-8-44-ல் திருச்சி உதவி கல்வி அதிகாரி தோழர் எஸ். வீராசாமி அவர்கள் தலைமையில் நடந்த பழந்தமிழ் மாணவர்களின் முன்னேற்றக் கழகக் கூட்டத்தில், தோழர்கள் ஏ. பர்னாண்டெஸ், என். கந்தசாமி முதலியவர்கள் சமூக சேவை, கிராமசீர்திருத்தம் முதலியன பற்றிப் பேசினார்கள்.

* *

கீழவெளியூர்: 4-9-44-ல் ஆதிதிராவிட தெருவில் நடந்த பொதுக் கூட்டத்தில் தலைவரால் திராவிடர் நிலைமை விளக்கப்பட்டு, பேரில் தேசநாடு வெற்றியுற வேண்டுமென்றும், சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை முழுமனதுடன் ஆதரிப்பதாயும் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு பாகுபட பொது மக்களைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

ஷையூரில் தோழர்கள் ஆறுமுகம், ப. கருப்பணன், பி. ஆறுமுகம், கு. முருகேசன் ஆகியவர்களை முறையே தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகக் கொண்ட திராவிட இளைஞர் கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

* *

கோவில்பட்டி: தோழர் ராபார்ட் ஜேக்கப்ஸ் தலைமையில் 16-9-44ந்தேதி நடைபெற்ற ஆ. தி. ச. சி. வாலிபர் சங்கக் கூட்டத்தில் 14-வது படையிலிருந்து வெற்றியுடன் திரும்பிய ராணுவத்தோழர்களுக்கோர் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

அன்றிரவு ஷை சங்கத்தில் தோழர் ஜெகவடியான் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், தொண்டர் படை என்பதுபற்றி தோழர்கள்ஐயனார், அய்யாப்பிள்ளை முதலியவர்கள்பேசினர்.

* *

ஆத்தூர் (சேலம் ஜில்லா): தோழர் எஸ். வி. நாகப்பண்டிதர் தலைமையில் 17-9-44ல் நடைபெற்ற ஆத்தூர் மருத்துவ குல சங்கக் கூட்டத்தில், 'இந்து நேசன்' பத்திரிகை அம்பட்டன் என்று எழுதியிருப்பதைக் கண்டித்தும், ஆத்தூர் யூனியன் போர்டில் நாவித தெரு என்று எழுதியிருப்பதை மருத்துவர் தெரு என்று மாற்றவேண்டுமென்றும் மற்றும் சில தீர்மானங்களும் தீர்மானிக்கப்பட்டது.

* *

சூலமங்கலம்: தஞ்சை மாவட்ட சூலமங்கலத்தில் 17-9-44ல் தேசிய போர் முனை சொற்பொழிவாளர் தோழர் வி. வீராசாமி தலைமையில் ஆதிதிராவிட இளைஞர் கழகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. பல தோழர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் கடமை என்பதுபற்றி பேசினார்கள்.

* *

தூத்துக்குடி: 10-9-44ல் செல்விசர் பங்களாவில் நடைபெற்ற இந்து மதத்தினர் கூட்டத்தில் சு. ம. காரர்களைப்பற்றி தவறாக பேசியதற்காக 11-9-44ந்தேதி சிவன்கோவில் பக்கமுள்ள மைதானத்தில் தோழர் எம். பலவேசம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் குலசேகர குமாரவேல், எம். சிவசாமி, கே. தானமுத்து முதலியோர் இந்து மதம் என்பது பற்றியும், அதன் ஊழலையும் விளக்கினார்கள்.

* *

காட்டூர்: தஞ்சைஜில்லா வர்த்தக காரியஸ்தர்கள் சங்கத்தலைவர் தோழர் டி. எம். ராஜப்பா தலைமையில் 17-9-44ல் காட்டூர் வர்த்தக சங்கமொன்று ஆரம்பமாயிற்று.

* *

திருப்பூர்; 20-9-44ந்தேதி ஈரோடு தோழர் ரங்கசாமி தலைமையில் திருப்பூர் மருத்துவர் சங்கம் திறந்துவைக்கப்பட்டது. ஷை சங்கத்திற்கு வி. ஆறுமுகம் தலைவராகவும், சே. சென்னியப்பன் காரியதரிசியாகவும், மற்ற நிர்வாகிகளும், 16 நிர்வாக உறுப்பினர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

சிதம்பரம்: 17-9-44-ஆந் தேதி தோழர் நாகப்பன் தலைமையில் நடைபெற்ற மருத்துவகுல சங்கத்திற்கு நான்காவது ஆண்டு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: ச. சாமிநாதன். செயலாளர்: கோபாலகிருஷ்ணன். மற்ற நிர்வாகிகளும் தெரிந்தெடுக்கப்பட்டனர். பின் 4-10-44ல் ஷை சங்கத்தின் 4-வது ஆண்டு விழாவை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

* *

கொழும்பு: அழகசேரி, பிராங்குளம் இந்து-கிறிஸ்துவ ஐக்கிய சங்கக் கூட்டம் 5-10-44-ல் நடத்தவும், சேலம் மாநாட்டு தீர்மானப்படி பெயர் மாற்றவும் புது சட்ட திட்டங்கள் ஏற்படுத்தவும் தீர்மானம் செய்திருப்பதால் அங்கத்தினர் தங்கள் விருப்பத்தை கடிதமூலம் தெரியப்படுத்த ஷை சங்க செயலாளர் தோழர் சண்முக மகாராஜன் கேட்டுக்கொள்கிறார்.

* *

தாராவி, பம்பாய்: 10-9-44-ல் கேசவா சமுத்திரம் ஆதிதிராவிட முன்னேற்ற லீகின் மாதாந்திர பொதுக் கூட்டம் தோழர் கே. ஏ. பெருமாள் தலைமையில் நடந்தது. தோழர்கள் கணேசன், நாயகம் முதலியவர்கள் சங்கங்களின் அவசியம் என்பது பற்றிப் பேசிய பின் தோழர்கள் கே. பெருமாளும், கே. மாடசாமி முதலியவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர்.

* *

கோவை: 11-9-44-ல் தோழர் சி. கெ. சுப்பையா தலைமையில் கோவை மருத்துவர் சங்கம் திறந்து வைக்கப்பட்டது. தோழர் சி. கெ. சுப்பையாவைத் தலைவராகவும் தோழர் எஸ். கணபதியைக் காரியதரிசியாகவும் கொண்ட நிர்வாகக் கழகம் ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

பொன்னமராப்பேட்டை: 7-9-44-ல் தோழர் எஸ். எல். குருசாமிசெட்டி தலைமையில் நடைபெற்ற ஜஸ்டிஸ் இயக்கவாலிபர் சங்கக் கூட்டத்தில் ஷை சங்கத்தின் ஆண்டு விழாவை நவம்பர் மாதத்தில் நடத்துவதென்றும், சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

Edited Printed and Published by N. K[illegible] at the Tami[illegible] Press, [illegible], Erode.